<u>IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI</u>

**IA.No**.795/2018 **in OS.No**.27/2015 **Date**: 08.07.2025

RW1- கந்தசாமி

<u>சாட்சி மீண்டும் முன்னிலையானதின் பேரில் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

மனுதாரரை எனக்கு 15 வருடங்களாக தெரியும். அவர் குடும்பத்தாரையும் தெரியும். அவரது பூர்வீகம் திருச்சி. அவருக்கு காரைக்குடியில் இருந்த பூர்வீக நிலத்தை அவரது அப்பா விற்பனை செய்தபோது நானும் அதில் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால், சரிதான். இந்த மனுவில் தாவா பிரதிவாதி எதிருரை தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். தாவா சொத்தில் 2016 முதல் மனுதாரர்தான் சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றால், சரியல்ல. தாவா கிரைய ஒப்பந்தத்திற்கு முன்பு நான் தாவா சொத்தை நேரில் பார்வையிட்டேன் என சொல்வது பொய் என்றால், சரியல்ல. மனுதாரர் எனக்கு நெருங்கிய நண்பர் என்றாலும், அவர் சொத்தில் சுவாதீனத்தில் இருப்பது தெரிந்துதான் நான் தாவா கிரைய ஒப்பந்தம் செய்தேன் என்றால், சரியல்ல. 04.10.2012 ல் ஒப்பந்தம் போட்டோம். அதன் வாய்தா 3 மாதங்கள். ஆனால் 2 வருடம் 2 மாதங்கள் கழித்துதான் தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். தாவா ஒப்பந்தம் பெயரளவில் ஏற்பட்டது என்றால், சரியல்ல. தாவா சொத்தில் மனுதாரர் குடியிருப்பதற்கு அனைத்து அரசு ஆவணங்களும் தாக்கல் செய்துள்ளார் என்றால், அது பொய்யானவை ஆகும். அதனால் மனு அனுமதிக்கப்படவேண்டும் என்றால், சரியல்ல.

ஒப்பம்/- கந்தசாமி

ஒப்பம்/- திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.